# கேள்வி அறிவித்தல்
# சபை நிதி 2024 ( கட்டம் V)
# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 202411.05 – 2024.11.18 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) **2024.11.19ந்** திகதி **10.30** மணிக்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **மு.ப 10.30** மணிக்கு **2024.11.11** அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF-S/ 2024/49 | **தொகுதி A**<br>1. சோமரந் தோட்ட முதலாம் குறுக்கு வீதி புனரமைத்தல், சுன்னாகம் (கட்டம் IV)<br>2. மயிலணி வடக்கு முன்றாம் ஒழுங்கை அமைத்தல்<br>3. நொதேர்ன் விளையாட்டுக்கழக கிழக்கு ஒழுங்கை அமைத்தல், உடுவில் | 2.82 | 45 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 29,000.00 | 18.02.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF-S/ 2024/50 | **தொகுதி B**<br>1. சுன்னாகம் மின்சார நிலைய வீதி முன்றாம் ஒழுங்கை அமைத்தல்<br>2. ஸ்கந்தவரோதயா கல்லூரி கிழக்கு ஒழுங்கை புனரமைத்தல் | 2.33 | 45 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 24,000.00 | 18.02.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2024/51 | **தொகுதி C**<br>1. அருளகம் வீதி முதலாம் ஒழுங்கை அமைத்தல்<br>2. பூதவராயர் முன்றாம் குறுக்கு வீதி அமைத்தல் | 2.07 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 21,000.00 | 18.02.2025 வரை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04. | NP/14/41(15)/02/05/CF/2024/52 | சுன்னாகம் மின்சார நிலைய வீதி - கொத்தியாலடி இணைப்பு வீதி அமைத்தல் | 5.42 | 60 | C7 and C6 (வீதிகள்) | 77 | 04.02.2025 | 55,000.00 | 04.03.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/2024/53 | சுன்னாகம் மின்சார நிலைய தெற்கு வீதி அமைத்தல் | 3.64 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 37,000.00 | 18.02.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF/2024/54 | அறிவொளி சனசமூகநிலைய குறுக்கு வீதி உப ஒழுங்கை அமைத்தல், ஏழாலை | 2.54 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 26,000.00 | 18.02.2025 வரை |
| 07. | NP/14/41(15)/02/05/CF/2024/55 | சூராவத்தை வெள்ளவாய்க்கால் வீதி புனரமைத்தல், ஏழாலை | 2.33 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 24,000.00 | 18.02.2025 வரை |
| 08. | NP/14/41(15)/02/05/CF/2024/56 | வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் பொது நூலக கட்டட அபிவிருத்தி வேலைகள் | 2.71 | 60 | C8 and C7 (கட்டடம்) | 63 | 21.01.2025 | 28,000.00 | 18.02.2025 வரை |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) பின்பற்றப்படும்".**

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** **05.11.2024**